# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கம்பெனிகள் (திருத்தச்) சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

*2014, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2014 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கம்பெனிகள் (திருத்தச்) சட்டம்*

[*2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 11/2014*

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1***. *இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கம்பெனிகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 132 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2***. *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 132 ஆம் பிரிவு, அப்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-*

*"ஒவ்வொரு தனியார் கம்பெனியாலும் ஆண்டு விபரத் திரட்டுடன் வெளிப்படுத்துகையும் சான்றிதழ்களும் அனுப்பப்படுதல்.*

*132. (1) தனியார் கம்பெனி ஒவ்வொன்றும் அதன் ஆண்டு விபரத்திரட்டுடன், பதிவாளருக்கு–*

*(அ) அவர்களின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரை முதன்மைச் சட்டவாக்கத்தின் தேவைப்பாடுகளுக்கு அவர்கள் இணங்கியொழுகியுள்ளதென்ற பயன்பட கம்பெனியின் பணிப்பாளர்களினால் ஒப்பமிடப்பட்ட வெளிப்படுத்துகையொன்றை ;*

*(ஆ) (i) விடயத்துக்கேற்ப, கடைசி விபரத்திரட்டின் தேதியிலிருந்து அல்லது முதலாவது விபரத்திரட்டொன்றின் விடயத்தில் கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியின் எவையேனும் பங்குகள் அல்லது தொகுதிக்கடன் பத்திரங்களுக்காக ஒப்பப்பணம் செலுத்துமாறு பொது மக்களுக்கு அழைப்பெதனையும் வழங்கவில்லையென உறுதிப்படுத்தியும் ;*

(ii) ஆண்டு விபரத்திரட்டானது கம்பெனியின் பங்குதாரர்களின் எண்ணிக்கை ஐம்பதை விஞ்சுகின்றதென்ற நிகழ்வை வெளிக்காட்டுகின்றவிடத்தும், அத்தகைய மேன்மிகை, 27 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட அவ்வெல்லை தொடர்பாக அப்பிரிவின்கீழ் உள்ளடக்கப்படாத ஆட்களை முழுமையாகக் கொண்டிருக்குமிடத்தும்,

கம்பெனியின் பணிப்பாளரொருவரினாலும் செயலாளரினாலும் ஒப்பமிடப்பட்ட சான்றிதழொன்றை ;

(இ) கம்பெனியானது, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 106 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ளதென உறுதிப்படுத்தி உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை,

அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) (அ) 131 ஆம் பிரிவிற்கமைவாக, ஒவ்வொரு தனியார் கம்பெனியும், அத்தகைய கம்பெனியின் ஆண்டு விபரத்திரட்டுடன், அத்தகைய கம்பெனி ஒடுக்கப்படுவதற்கு முன்னர் அல்லது அதன் அந்தஸ்து மாறுமுன்னர் அல்லது இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒத்த நிலைமை ஏற்படு முன்னர் எந்நேரத்திலும் நடைபெற்ற அத்தகைய ஏதேனும் ஒடுக்குதல் அல்லது மாற்றம் ஏதேனுமிருப்பின் அதனை விதித்துரைக்கப்பட்ட முறையில் பதிவாளருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்றை உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைப்பது பதிவாளரின் கடமையாதல் வேண்டும்.".

இப்பிரிவின் நோக்கங்களுக்காக,-

''ஒத்த நிலைமை'' என்பது, சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான ஓர் ஒழுங்கேற்பாடு, ஒன்றுசேர்க்கை, ஒன்றிணைவு அல்லது இணக்கம் என்று பொருளாகும்.

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஒன்பதாவது அட்டவணையைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஒன்பதாவது அட்டவணையின் விடயம் 2 இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) பந்தி (ஆ)வில், "ஒழித்துக்கட்டல் ஆரம்பிக்க முன்னரான ஒரு முழு ஆண்டிற்கென விதிக்கப்படும் அல்லது விதிக்கப்படற்பாலதான வருமானவரி, அத்தகைய ஆண்டு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒழித்துக்கட்டல் ஆரம்பிக்க முன்னரான ஐந்து முழு ஆண்டுகளுக்குமென விதிக்கப்பட்ட அல்லது விதிக்கப்படற்பாலதான வருமானவரி, அந்த ஐந்தாண்டுக் காலப்பகுதி'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) பந்தி (ஈ)இல், அப்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :-

''(ஈ) ஒழித்துக்கட்டல் ஆரம்பிக்க முன்னரான ஐந்தாண்டுக் காலப்பகுதியினுள் வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளுக்கு விதிக்கப்படற்பாலதான சேர்பெறுமதி வரி, அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகள், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 529 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 529 ஆம் பிரிவு "வகுப்பு" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் 208 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்